24 மணி நேரமும் மக்களுக்காக உழைத்த முதலமைச்சர்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு...

5ஆம் பக்கத் தொடர்ச்சி

நல்லதைச் செய்திருக்கிறார். வெற்றி பெறுவார். அவரைப் போன்று தமிழ் நாட்டு மக்களுடைய நாடியைப் பிடித் துத் திட்டங்கள் தீட்டுகிற ஒரு முதல மைச்சரை சுதந்திரக் காலத்திலிருந்து இதுவரைக்கும் இல்லை. அவர் முதல மைச்சராகப் பொறுப்பேற்ற உடனே பத்திரிக்கையாளர்கள் கேட்கிறபோது சொன்னார், சொன்னதோடு மட்டுமல் லாமல் கடைசி வரைக்கும் அப்படித் தான் நடந்தார்; "எனக்கு ஓட்டுப் போட்ட வர்களுக்கும் நான்தான் முதலமைச்சர், எனக்கு ஓட்டுப் போடா தவர்கள் கூட ஏன் ஓட்டுப் போட வில்லை என்று எண்ணுகிற அளவுக்கு நான் ஆட்சியை நடத்துவேன்" என்று சொன்னார். எல்லாருக்குமான ஒரு ஆட்சியாக நடத்தினார். அந்த ஆட்சி யைப் பற்றி யாராவது ஒரு குறை சொல்ல முடியுமா? ஒருவராவது சொல்ல முடியுமா?

எனக்குத் தெரிந்து, 24 மணி நேரத் தில் அநேகமாக இரண்டு மணி நேரம் தான் அவர் தூங்குவார் என்று நினைக் கிறேன். ஒரு நாள் அதிகாலை இரண்டேகால் மணிக்கு என்னுடைய தொலைபேசி அடிக்கிறது. அந்த நேரத் தில் யார் அழைப்பார்? திருவண்ணாமலை தொகுதிக்காரன் யாருக்காவது பிரச்சினையா என்று யோசனை செய்து தொலைபேசியை எடுக்கிறேன். பார்த்தால், முதலமைச்சருடைய போன்! போன் எடுத்த உடனே, "அண்ணன் தூங்கிட்டீங்களா?" என்று கேட்கிறார்! இரண்டேகால் மணிக்குத் தூங்காமல் நான் என்ன பண்ண முடியும்?

நான் பக்குவமாகச் சொன்னேன், "ஆனா 12 மணி வரைக்கும் படித்துக் கொண்டுதான் இருந்தேன், இப்போது தான் கண் அசந்தது" என்று சொன் னேன்; தூங்கினேன் என்று கூடச் சொல்லவில்லை. ஏனென்றால், அவர் தூங்காமல் நமக்குப் போன் செய்கி றார், நான் தூங்கினேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் கேட்கிறார், "மதுரையில் அண்ணன் கலைஞர் பெயரில் அவர் நூற்றாண்டை முன் னிட்டு ஒரு நூலகம் கட்டிக் கொண்டி ருக்கிறோமே, அது எப்போது முடியும்?" என்று கேட்கிறார்!

மதுரையில் அண்ணன் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தென்னகப் பகு தியில் இருக்கிறவர்கள் எல்லாம் அறி வாளிகளாக வேண்டும் என்ற ஒரே அடிப்படையில் கட்டப்படுகிற, அறிவு உலகத்திற்காகக் கட்டப்படுகிற நூலகத் தைப் பற்றி, அதிகாலை இரண்டேகால் மணிக்கு அவர் கேட்கிறார் என்றால், அந்த முதலமைச்சர் தூங்கினாரா? தூங்கவில்லையா? என்று எப்படிச் சொல்லச் சொல்கிறீர்கள்? எனவே, நாட்டு மக்களுக்காக இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் தூங்கிவிட்டு நமக்காக உழைத்த தலைவர் அந்தத் தலைவர். அவர் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார் என்று நினைக்கிறபோது, எங்கள் கண் கள் எல்லாம் கலங்குகிறது.

கலைஞரின் வழியில் 70 ஆண்டுகால உழைப்பு!

ஆனால் ஒரு விதத்தில் நாங்கள் யோசிக்கிறோம்; இந்தச் சட்டமன்றத்தி லிருந்து உங்கள் வாயால் 'மாண்பு மிகு முதலமைச்சர்' என்று சொல்ல வேண்டுமா? இந்தச் சட்டமன்றத்தில் உங்களுடைய உழைப்பு என்ன? நாட்டு மக்களுக்காக நீங்கள் உழைத் தது என்ன? 73 வயதில் இருக்கிற நீங் கள், எனக்குத் தெரிந்து கிட்டத்தட்ட 14 வயதிலிருந்து இந்த மக்களுக்காகவே, கழகத்திற்காகவே உழைத்துக் கொண் டிருக்கிற உங்கள் வாயால், 'முதல மைச்சர்' என்று சொல்ல வேண்டுமா? ஒரு பக்கம் எங்களுக்கு வருத்தம் இருந்தாலும் கூட, இந்தச் சம்பவம் நடைபெறாமல் இருந்தது ஒரு விதத் தில் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார்? தேர்தலுக்கு முன்னால் எத்தனையோ பொய்கள், புறங்கூற்று கள், கட்டுக்கதைகள் எல்லாம் சொன் னீர்கள். ஆனால், முதலமைச்சருக்கு என்று ஒரு கண்ணியம் இருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய முதலமைச்ச ராகப் பொறுப்பேற்று முதல்முதலாகத் திருச்சிக்குச் சென்று தன்னுடைய உரையை அவர் ஆற்றுகிறார். நீங்கள் என்ன சொல்லி இருக்க வேண்டும்? "நான் முதலமைச்சராக வந்திருக்கி றேன், எனக்கு வழிகாட்டியாக ஏற்க னவே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிறவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்திருக்கிறார்; அவர் எப்படி எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்கிற ஆட்சி நடத்தினாரோ, அதைப் போன்று நானும் நடத்து வேன்" என்று சொல்லி இருந்தால், நாம் கூட 'சபாஷ்' என்று பாராட்டி இருக் கலாம்.

புகழும் சமுதாயத் தொண்டும்: ஒரு ஒப்பீடு!

ஆனால் நீங்கள் அங்கே என்ன பேசுகிறீர்கள்? "ஏதோ சினிமாவில் நடித்த காரணத்தினால் எனக்கு வாக்க ளித்தார்கள் என்று பேசுகிறார்கள், எனக்கு வாயில் ஏதாவது வந்துவிடும்" என்று பேசுகிறீர்கள். நீங்கள் சினிமா வில் நடித்த புகழை மையமாக வைத்து ரசிகப் பெருமக்கள் உங்களுக்கு வாக்க ளித்திருக்கலாம்; உங்களைத் திரை யில் பார்த்த வாக்காளப் பெருமக்கள் ஓட்டுப் போடலாம் என்று போட்டிருக்க லாம். அல்லது நீங்கள் என்ன ஏற்க னவே இந்திப் போராட்டத்திலே "இந்தி ஒழிக, தமிழ் வாழ்க" என்று சொல்லிச் சிறைக்குப் போனது உண்டா? அல் லது இரண்டு ஆண்டுகளுக்கு முன் னால் இதே சென்னை, பெரும் மழை யின் காரணத்தினால் பெரும் சீற்றத்தின் காரணமாகத் தத்தளித் ததே... வேளச்சேரி போன்ற பகுதியில் ஜே.சி.பி. மூலமாகத் தான் உணவுப் பொட்டலங்களைக் கொண்டு போய் கொடுக்க வேண்டிய நிலை எல்லாம் இருந்ததே; அப்படிப்பட்ட வெள்ளக்கா டாக இருக்கிற போது நீங்கள் படகு எடுத்துச் சென்று அனைத்து மக்களுக் கும் உணவு வழங்கி, மக்களுக்கு உதவி செய்தது உண்டா? இந்தச் சமு தாயத்திற்காக நீங்கள் பாடுபட்ட வர லாறு ஏதாவது உண்டா? எதுவுமே இல்லையே!

எனவே, உங்களுக்கு அரசியல் தொடர்பு இல்லை, சமுதாயத் தொடர்பு இல்லை, சமூகப் பணி செய்யவில்லை; உங்களுக்கு இருந்த ஒரே துறை சினிமா துறை. அந்தச் சினிமா துறை மூலமாக ஓட்டுப் போட்டார்கள் என்று சொன்னால், அதில் உங்களுக்குக் கோபம் வரவேண்டிய அவசியம் இல் லையே? அதைச் சொல்லிவிட்டு என்ன சொல்கிறீர்கள், "எனக்கு ஏதா வது வாயில் வந்துவிடும்" என்று சொல் கிறீர்கள். வள்ளுவர் அப்படி சொல்ல வில்லையே... 'இனிய உளவாக இன்னாத கூறல் — கனிஇருப்பக் காய் கவர்ந் தற்று' என்றார். "இனிமையாக எத்தனையோ சொல் இருக்கிறது. அதைச் சொல்லலாம். அதைவிட்டு விட்டு, நீ வாயால் எதையாவது சொன் னால் உனக்கு விரோதி கிடைப்பான்" என்கிறார். பழம் இருக்கிறது, காய் இருக்கிறது; எதைச் சாப்பிடுவாய்? பழத்தைத்தானே சாப்பிடுவாய், காயையா சாப்பிடுவாய்? அதைத் தானே சொல்கிறார், நீங்கள் இனிமை யாகச் சொல்ல வேண்டிய எத்த னையோ வார்த்தைகள் இருக்கிற போது, அதைச் சொல்லவில்லை என் றால், நீங்கள் பழத்தை விட்டுவிட்டுக் காயைச் சாப்பிடுகிற கதை என்று நான் சொல்லவில்லை, வள்ளுவர் சொல்கிறார்.

திருக்குறளும் கலைஞர் கோட்டமும்!

அந்தத் திருக்குறளை நீங்கள் படிக்க வில்லையா? கலைஞருக்குத் திருக்குறள் சொந்தம், திருக்குறள் கலைஞருக்குச் சொந்தம். அதனால் தான் இங்கே வள்ளுவர் கோட்டம் கட் டியிருக்கிறார் அண்ணன் கலைஞர். 133 அடி சிலை கன்னியாகுமரியில் இருக்கிறது என்று சொன்னால், அது வும் அண்ணன் கலைஞர் தானே!

திருக்குறளுக்கு எத்தனை பேர் உரை எழுதினார்கள்? பரிமேலழகரிலி ருந்து, திருக்குறள் முனுசாமி யிலிருந்து, மு. வரதராசனாரிலிருந்து, இலக்குவனாரிலிருந்து எத்தனை பேர் உரை எழுதினார்கள்; ஆனாலும் இன் றைக்கும் பாமரனுக்குப் புரிகிற மாதிரி உரை எழுதியவர் என் அண்ணன் கலைஞர். ... திருக்குறளை யும் அண் ணன் கலைஞரையும் மறக்க முடி யுமா, பிரிக்க முடியுமா? பிரிக்க முடி யாது. அப்படிப்பட்ட குறளையெல்லாம் முதலமைச்சர் படிக்க வேண்டும்; நீங் கள் படித்தால்தான் அப்படி எல்லாம் சொல்ல மாட்டீர்கள். "என் வாயில் ஏதா வது வந்துவிடும்" என்று சொல்கிறீர் களே, எதற்கு வர வேண்டும்? எனக் குப் புரியவில்லை. நானும் யோசித்து யோசித்து பார்க்கிறேன், எதற்கு வர வேண்டும்? திரையுலகத்தினுடைய புகழ்ச்சியால் நீங்கள் ஆட்சியைப் பிடித் தீர்கள் என்று உண்மையைச் சொன் னால், ஏன் கோபப்படுகிறீர்கள்?

இங்கே பேராசிரியர் ஜவாஹி ருல்லா இருக்கிறார்... எங்கள் வட ஆற் காடு மாவட்டத்தில் வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியிலே சிறப்பாகப் பணியாற்றினார்; பல மாணவர்களை உருவாக்கி இருக்கிறார் என்று அவ ருக்கு ஒரு பெருமை உண்டு; நல்ல மாணவர்களை உருவாக்கினார் என்று நம்புகிறேன். அவருக்கும் எனக் கும் கிட்டத்தட்ட இருபது ஆண்டு கால நெருக்கமான நட்பு; எங்கள் ஊர் பேரா சிரியர் என்ற நட்பு, சட்டமன்ற உறுப்பி னர் என்ற நட்பு, இப்போது தோழமைக் கட்சித் தலைவர் என்ற நட்பு, இப்படிப் பட்ட நட்பு எங்களுக்கு உண்டு. அவர் தொழில் பேராசிரியர், அதைச் சொல்வ தில்தானே அவருக்குப் பெருமை; நீங் கள் திரைத் துறை, அது உங்களுக்குப் பெருமைதானே, அதைச் சொன்னால், ஏன் கோவப்படுகிறீர்கள்?

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் சாதுரியம்!

மூகாம்பிகை கோயிலுக்குச் சென்ற காரணத்தினால் அனைவரும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகிவிட முடியுமா? அவரிடமே அந்தக் காலத்தில் கேட்டார் கள், "நீங்கள் பெரியார் பெரியார் என்று சொல்கி றீர்களே, பெரியாருக்கே நூற் றாண்டு விழா கொண்டாடுகிறீர்களே, பெரியாருடைய எழுத்துச் சீர்திருத்த ங்களை நீங்கள்தானே அறிவித்தீர் கள், ஏன் மூகாம்பிகை கோயிலுக்கு சென்றீர்கள்?" என்று கேட்டார்கள். அவர்களெல்லாம் பத்திரிகை யாளர்களைச் சந்திக்கிற முதலமைச்சர், உடனே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சொன்னார், "வேறு ஒன்றும் அல்ல; நான் மூகாம்பிகை யில் எங்கள் அம்மா சத்யாவைப் பார்த்தேன்" என்று ஒரே போடு போட்டார். அங்கே என்னு டைய தாயின் உருவத்தை நான் பார்த் தேன்" என்று சொன்னவர் மக்கள் தில கம் எம்.ஜி.ஆர்.

அதனால் ஒன்று சொல்கிறேன், மிஸ்டர் சி.எம். சார்... நல்ல ஆட்சி நடத் துங்கள். இங்கே நம்முடைய செந்தில் வேலன் குறிப்பிட்டதைப் போன்று, இன்றைக்குப் போட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்கிற திராவிட மாடல் ஆட்சி போட்ட திட்டங் கள்தான். எப்படி நாம் பிறந்த மண் ணுக் குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட்ட பேரறிஞர் அண்ணாவை நாம் மறக்க வில்லையோ, அதைப்போன்று முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர் களை இந்தத் தமிழ் மண் மறக்காது.

ஒரு இலக்கியக் கூட்டத்திலே நான் சொன்னேன், "நாட்டிலே இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி பெற வேண் டும் என்று திட்டங்கள் போடலாம், மாநி லம் வளர்ச்சி பெற வேண்டும் என்று திட்டங்கள் போடலாம்; ஆனால் ஒரு குடும்பம் வளர்ச்சி பெற வேண்டும் என்று பொருளாதார வளர்ச்சித் திட்டம் போட வேண்டும் என்றால், அது முத்து வேல் கருணாநிதி ஸ்டாலினால் மட் டும்தான் முடியும்." அனைத்து வீடுக ளுக்கும், நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கும் எத்தனையோ திட்டங்களை அவர் தந்தார்; அதனால் அவர் போட்டிருக்கிற திட்டங்கள் எல் லாம் நல்ல திட்டங்கள். அந்தத் திட்டங்க ளைக் கூடுமான வரைக்கும் பின்பற்றுங்கள், இப்போது அதைத் தான் என்னால் சொல்ல முடியும்.

புதிய அமைச்சரவையின் நிர்வாகத் திறமையின்மை!

இன்னும் முதல் சட்டமன்றக் கூட் டத்தொடரையே நாம் பார்க்கவில்லை; எப்படி அமைச்சர் எழப் போகிறார், எப்ப டிப் பதில் சொல்லப் போகிறார் என்று ஒன்னும் புரியவில்லை. சட்டசபைக் குப் போனால்தான் எங்களுக்கே புரி யும். ஏனென்றால், இங்கே செந்தில்வே லன் சொன்னதெல்லாம் பார்த்தால் எனக்கே தலை கிறுகிறுக்கிறது. அவர வர் துறை பற்றி அவர்களுக்கே தெரிய வில்லை. சுற்றுச்சூழல் துறைக்கும், சுற்றுலாத் துறைக்கும் இருக்கிற மாறு பாடே புரியவில்லை என்கிறார்; என்ன நிலைமையோ எங்களுக்குத் தெரிய வில்லை.

இருந்தாலும் சட்டமன்றத்தில் வைத் துக் கொள்ளலாம் என்று சொல்லி, மிஸ்டர் சி.எம். சார், தமிழ்நாட்டுக்கு நல்லதைச் செய்யுங்கள், நல்லது செய் யுங்கள். நல்லது செய்யவில்லை என் றால் அரசியல் விமர்சனம் வரத்தான் செய்யும், அதையும் தாங்கிக் கொள்ளத் தான் வேண்டும். அதற்காக "என் வாயில் எது வேண்டுமானாலும் வரும்" என்றால், ஏதோ ஒரு முறை நீங்கள் சொன்னால் நாங்கள் பொறுத் துக் கொள்கிறோம்; இல்லையென்றால் எங்களுக்கும் வாயில் எது எதெல் லாமோ வரும்.

மீண்டும் ஒருமுறை எங்களை எல் லாம் பொத்திப் பொத்தி வளர்த்த எங்கள் அண்ணன் கலைஞருக்கு, இங்கே சிறப்பான பிறந்தநாளாகக் கொண்டா டிக் கொண்டிருக்கிற பகுதிக் கழகத்திற் கும், நன்றியோடு உதயசூரியனுக்கு வாக்களித்த இந்தத் துறைமுகம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக் கும், அதன் மூலமாக இங்கே சட்ட மன்ற உறுப்பினராக உருவாகி இருக் கிற உங்கள் வீட்டுப் பிள்ளை சேகர்பாபு அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்த தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளுக்கும் எனது கோடான கோடி நன்றியைச் சொல்லி, உரையை நான் நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

வந்தவாசியில் 5 மணிநேரம் மின்வெட்டு: மக்கள் கடும் அவதி!

வந்தவாசி, ஜூன் 20-

தமிழகத்தில் தற்போது தொடர் மின்வெட்டு ஏற் பட்டு வருகிறது. இரவு நேரங்களில் நிம்மதியாக தூங்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளதாக பொதுமக் கள் தங்களுடைய அதிருப் தியை வெளிப்படுத்தி வருகின்றனர். நள்ளிரவு நேரங்களில் ஏற்படும் மின் வெட்டு காரணமாக குழந் தைகள், முதியவர்கள் மற் றும் நோயாளிகள் தூக்கமின்றி தவித்து வரு கின்றனர். அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல் வேறு இடங்களில் பொது மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்திலும் திருவண் ணாமலை, ஆரணி, செய் யாறு, சேத்துப்பட்டு உள் ளிட்ட பல்வேறு இடங்களில் தொடர் மின் வெட்டு ஏற்பட்டு வருகி றது. மேலும் பெரும்பா லான இடங்களில் டிரான்ஸ் பார்மர்கள் பழுதடைந்தால் அவற்றை துரிதமாக சரி செய்ய அதிகாரிகள் முன்வ ருவதில்லை என பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன.சமீபத்தில் ஆரணியில் மின்சாரம் இல்லாததால் விவசாய நிலங்களில் தண் ணீர் பாய்ச்ச முடியாமல் நெற்பயிர்கள் கருகியது. இதனால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டது. மின்வெட்டு காரணத்தால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டு வரும் நிலை யில் வந்தவாசி தாலுகாவில் வந்தவாசி அடுத்த பாதூர், அம்மணம் பாக்கம், வெள் ளியம்பாக்கம், கொட்டை உள்ளிட்ட நான்கு கிராமங் களில் நேற்று காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை திடீரென மின்சாரம் தடை ஏற்பட்டது.

இதனால் பொதுமக்கள் கடும் சிரமமடைந்தனர். குறிப்பாக பெண்கள் காலையில் குழந்தைகளுக்கு சமையல் செய்யமுடியாமல் தவித்தனர். விவசாய நில பணிகளும் பாதிக்கப்பட் டது. இந்த மின்வெட்டை போக்க ஒசூர், கீழ்கொடுங்க நல்லூர், துணை மின் நிலை யங்களை சேர்ந்த ஊழியர் கள் துரிதமாக செயல்பட வில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டினர். வந்தவா சியில் நேற்று பல்வேறு இடங்களில் மின்னல்தாக்கி மின்சாரம் தடைபட்டது. மேலும் கொட்டை கிராமத் தில் மின்னல் தாக்கிய டிரான்ஸ்பார்மரில் பழுது நீக்க மின் ஊழியர்கள் துரித மாக செயல்படாததால் மின்சாரம் துண்டிப்பும் ஏற் பட்டது. இதேபோல் தொடர்ந்து கடந்த 15 நாட் களாக இரவு நேரங்களில் 30 நிமிடத்திற்கு மேலாக மின் தடை ஏற்படுவதாக அப்ப குதி மக்கள் புகார் தெரிவித் தனர்.

பேருந்து நிலையத்தில்

இளம்பெண்ணுக்கு த.வெ.க. நிர்வாகி பாலியல் தொல்லை

திருவாரூரில் பரபரப்பு!

திருவாரூர், ஜூன் 20-

திருவாரூர் பேருந்து நிலையத்தில் இளம்பெண் னுக்கு பாலியல் தொல்லை கொடுத்த த.வெ.க. நிர் வாகி மற்றும் இன்ஜினிய ரிங் மாணவன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். திருவாரூர் டவுன் பகு தியை சேர்ந்த 27 வயதான இளம்பெண். உறவினர் வீட்டுக்கு சென்று இருந்த வர், நேற்று முன்தினம் இரவு பேருந்தில் புதிய பேருந்து நிலையம் வந் தார். பின்னர் அங்கிருந்து வீட்டுக்கு செல்வதற்காக தந்தை வருகைக்காக காத்து இருந்தார். அப் போது அங்கு பைக்கில் வந்த 2 நபர்கள், தனியாக நின்ற அந்த பெண்ணிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்டனர். இதனால் அந்த பெண் பதறி அழு துள்ளார். சிறிது நேரத்தில் பெண்ணின் தந்தை பைக் கில் பேருந்து நிலையம் வந் தார். அப்போது அவரிடம் நடந்த விபரத்தை கூறி அழுதுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர், 2 பேர் வந்த பைக்கின் சாவியை பிடுங்கி வைத்து கொண்டார்.

இதுதொடர்பாக திரு வாரூர் டவுன் காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத் துக்கு விரைந்து சென்று இளம்பெண்ணுக்கு பாலி யல் தொல்லை கொடுத்த 2 பேரை பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்தனர். விசாரணை யில், திருத்துறைப்பூண்டி அடுத்த ஆலத்தம்பாடி கரும்பியூர் பகுதியை சேர்ந்த திருத்துறைப் பூண்டி வடக்கு ஒன்றிய தவெக செயலாளர் ஆனந்த் (எ) பிரவீன்குமார் (24), அதே பகுதியை சேர்ந்த அவரது நண்பர் நாகப்பட்டினத்தில் தனி யார் இன்ஜினியரிங் கல்லூரியில் 2வது ஆண்டு படித்து வரும் அசோக் (26) என தெரியவந்தது. இதுகு றித்து போலீசார் வழக்குப் பதிந்து 2 பேரையும் கைது செய்தனர். இந்தநிலையில் ஒன்றிய செயலாளார் ஆனந்த் (எ) பிரவீன் குமாரை கட்சியில் இருந்து நீக்கி திருவாரூர் தெற்கு மாவட்ட செயலாளர் பாரதி நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

மாணவியிடம் ஆபாச பேச்சு அரசுப்பள்ளி ஆசிரியர் கைது!

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை சேர்ந்த 17 வயது மாணவி சிறுமுகை பகுதியில் உள்ள அரசு பள்ளியில் பிளஸ் 2 முடித்து விட்டு தற்போது கோவை தனியார் கல்லூரி யில் முதலாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர் பள்ளியில் பயின்றபோது அங்கு கோவை துடியலூர் என்ஜிஜிஓ காலனி துரை ராஜ் நகரை சேர்ந்த சுரேஷ் (43) என்பவர் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். அப் போது, அவர் பாடத்தில் ஏதேனும் சந்தேகம் இருந் தால் தன்னை அழைக்கு மாறு செல்போன் எண்ணை கொடுத்துள் ளார். இந்நிலையில் கடந்த 11ம் தேதி ஆசிரியர் சுரேஷ், 17 வயது மாண வியை செல்போனில் அழைத்து ஆபாசமாக பேசியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவி அளித்த புகாரின் பேரில் மேட்டுப்பாளையம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக் சோவில் வழக்குப்பதிந்து நேற்று முன்தினம் ஆசிரி யர் சுரேஷை கைது செய் தனர்.

பெண்ணை தாக்கி கடத்த முயன்ற விஜய் கட்சி நிர்வாகி

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உஞ்சனை குட்டிக்கா பாளையத்தில் வசித்து வரும் 35 வயதான பெண் ணின் கணவர், பார் ஒன்றை லீசுக்கு எடுத்து நடத்தி வருகிறார். கடந்த சில நாட்களாக குமர மங்கலம் பகுதியை சேர்ந்த த.வெ.க. ஒன்றிய தொண் டரணி அமைப்பாளர் நவீன் என்பவர், காரில் பின்தொடர்ந்து வந்து அந்த பெண்ணிடம் அநா கரீகமான முறையில் நடந்து கொண்டார். இந் நிலையில், நேற்று முன்தி னம், எளையாம்பாளை யம் பிரிவு சாலை அருகே, அப்பெண் காலைக்கடன் கழிக்க வந்த போது, இரு நண்பர்களுடன் வந்த நவீன், காரில் ஏறுமாறு அப்பெண்ணை கட்டா யப்படுத்தி உள்ளார். அதிர்ச்சியடைந்த அவர், எதற்காக என்னை அழைக் கிறீர்கள் என கேட்ட போது, அப்பெண்ணின் கையை முறுக்கி சாதி பெயரைச் சொல்லி திட்டி அடித்துள்ளார். இதனைய டுத்து அந்த பெண் சத்த மிட்டதால், அவரை கீழே தள்ளி விட்டு காரில் தப்பி ஓடி விட்டார். இதில் காய மடைந்த அப்பெண், திருச் செங்கோடு அரசு மருத்து வமனையில் சேர்க்கப் பட்டார்.

இதுகுறித்து, திருச் செங்கோடு புறநகர் காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் விசாரித்து வரு கின்றனர்.

திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர்

காடுவெட்டி தியாகராஜனின் தந்தை நடேசன் முத்துராஜா மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 20

திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காடு வெட்டி தியாகராஜனின் தந்தை நடேசன் முத்துராஜா அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காடு வெட்டி தியாகராஜன் அவர்களது தந்தையார் நடேசன் முத்துராஜா அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேத னையடைந்தேன்.

ஆளாக்கி, அறிவூட்டி, அவையத்து முந்தி இருப்பச் செய்த அன்புத் தகப்பனாரை இழந்து தவிக்கும் சகோதரர் காடுவெட்டி தியாகராஜன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்க லையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடி தேவையில்லை – 132 அடியே போதும் என

கம்பம் த.வெ.க. எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா சர்ச்சை பேச்சு!

விவசாயிகள் கடும் கண்டனம்!

தேனி , ஜூன் 20-

த.வெ.க. கட்சியின் கம் பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 152 அடி தேவை யில்லை 132 அடியே போதும் என்ற சர்ச்சை பேச்சால் விவ சாயிகள் கடும் கண்டனம் தெரி வித்துள்ளனர்.

தமிழக கேரளா எல்லை யில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணை 152 அடி உயரம் கொண்டதாகும், இந்த அணையை நம்பி. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்ட விவ சாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் குடி நீர் ஆதாரமாக வும் விளங்குகிறது.

இந்நிலையில் கடந்த 2011 ம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்தக் கோரி தேனி மாவட்டம் மட்டு மின்றி மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களில் இருந்து விவசாயி கள் மற்றும் பொதுமக்கள் ஒரு மாதமாக பல்வேறு போராட்டங்களை நடத்தி னர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2014ல் உச்ச நீதிமன் றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. அதில் முல்லைப் பெரியாறு பலமாக உள்ளது. அதில் 142 அடி வரை நீர் தேக்கிக் கொள் ளலாம் என்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

இந்நிலையில் தேனி மாவட்டம் கம்பம் த.வெ.க. சட்டமன்ற உறுப் பினர் ஜெகநாத் மிஸ்ரா நேற்று முன்தினம் கேரளா தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தமிழக உரிமைகள் பறிபோகும் அளவிற்கு முல் லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 தேவை யில்லை. 132 அடி போதும் என்று இது கம்பம் மற்றும் தேனி மாவட்ட விவசாயிகள் இடையே கடும் கோபத்தை யும், கடும் கண்டனத்தையும் தெரிவித்து உள்ளது.

இது குறித்து முல்லைப் பெரியாறு அணை பாது காப்பு விவசாய சங்க முதன்மை தலைவர் சலேத் கூறியபோது.

முல்லைப் பெரியாறு அணை பற்றி பேச யாருக்கும் உரிமை கிடையாது, முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடி உய ரம் உயர்த்தி கொள்ளலாம் என்று கடந்த 2014 தீர்ப்பு வழங்கியது உள்ளது.

மேலும் பேபி அணையை பலப்படுத்தி பின் 152 அடி உயர்த்த வேண்டும் என்று இன்றும் விவசாயிகள் கூறி வரும் நிலையில் கம்பம் சட் டமன்ற உறுப்பினர் ஜெக நாதன் மிஸ்ரா 152 அடி உயரம் தேவையில்லை 132 அடியே போதும் எங்களுக்கு என்று கேரளா தனியார் தொலைக்காட்சிக்கு ஏற்ப பேசியது. அந்த சர்ச்சை பேச்சு மிகவும் தவறானது கடும் கண்டனத்திற்கு உரி யது என்றும் மேலும் விவசா யிகளுடன் ஆலோசித்து இது பற்றி அவர்களிடம் கேட்கப் படும் என கூறினார்.

தொழிலாளியை வெட்டிய போதை த.வெ.க. பிரமுகர்!

மயிலாடுதுறை, ஜூன் 20-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா அரைய புரத்தை சேர்ந்தவர் ரமேஷ்(45). கூலித்தொழிலாளி. அதே பகுதியை சேர்ந்தவர் கார்த்திக் (28). த.வெ.க. பிரமுகரான இவரது தாயார் குணவதி. கடந்த ஆண்டு பண தேவைக்காக ரமே ஷின்தாய்வெள்ளையம்மாளிடம் தங்க மூக்குத்தியை வாங்கி உள்ளார். அதை திருப்பி கொடுக்காத நிலையில் குத்தாலம் போலீசார் மூலமாக நகைக்கான பணத்தை ரமேஷ் பெற்றுள்ளார். இதனால் இவர்களுக்கு இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலை யில், கடந்த 12ம்தேதி நடைபெற்ற கோயில் விழாவில் ரமேஷ் உணவு பரிமாறியுள்ளார்.

அப்போது, பந்தியில் அமர்ந்திருந்த குணவதிக்கும் உணவு பரிமாறிய போது இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக குணவதி, குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு குணவதியுடன் ரகளையில் ஈடுபட்ட ரமேஷ், பின்னர் வீட்டில் தூங்க சென்று விட்டார். தகவல் தெரியவந்து போதையில் அவரது வீட்டுக்குள் புகுந்த கார்த்திக், தூங்கி கொண்டிருந்த ரமேஷை அரி வாளால் சரமாரி வெட்டி விட்டு தப்பிசென்றார். ரத்த வெள்ளத்தில் கிடந்த ரமேஷை உறவினர்கள் மீட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவருக்கு 30க்கும் மேற்பட்ட தையல்கள் போடப்பட்டு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக ரமேஷ் கொடுத்த புகாரின் பேரில், குத்தாலம் போலீசார் வழக்கு பதிந்து தவெக பிரமுகர் கார்த்திக், அவரது தாயார் குணவதி ஆகியோரை நேற்று கைது செய்தனர்.